தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 6, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 ஏப்ரல் 19, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

பாதாள சாக்கடை

***20735—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் உள்ள பாதாள சாக்கடை கால்வாயைத் தூர்வாரி அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தருவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, பள்ளிபாளையம் மற்றும் குமாரபாளையம் ஆகிய 5 நகராட்சிகள் மற்றும் 19 பேரூராட்சிகள் உள்ளன. ராசிபுரம் நகராட்சியில் நாமக்கல் பகுதியில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. திருச்செங்கோடு நகராட்சியில் 40 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பள்ளிபாளையம் மற்றும் குமாரபாளையம் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின்கீழ், கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு முறையே ரூ.10.79 கோடி மற்றும் ரூ.16.30 கோடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் தொழில் நகரமான நாமக்கல் நகராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நாமக்கல் சிறப்புநிலை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிக்கப்படும் என்பதற்கும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு அவர் வாழ்ந்த இல்லத்தில் மார்பளவு சிலை அமைக்கப்படும் என்பதற்கும் உத்தரவு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது நாமக்கல் தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதற்கு உறுதுணையாக இருந்த, நாமக்கல் நகராட்சிக்குப் பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகராட்சியில் மழைக் காலங்களில் சேகரமாகும் மழை நீர்,

2023 ஏப்ரல் 19]

நாமக்கல்லின் மையப் பகுதியில் அமைந்துள்ள பொய்யேரிக்கரை கால்வாய், திருச்சி-துறையூர் சாலை கால்வாய், குட்டைத்தெரு கால்வாய், இராமாபுரம்புதூர் கால்வாய் ஆகிய கால்வாய்களின் மூலமாகக் கொசவம்பட்டி ஏரிக்குக் கொண்டு செல்லப்படுகிறது. மேற்கண்ட கால்வாய்களின் அகலம் குறைவாக உள்ளதாலும், வண்டல் மண் படிந்துள்ளதாலும், மழைக் காலங்களில் மழை நீர் வெளியேறாமல் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் புகுந்துவிடுகிறது. எனவே, இந்தக் குறைபாடுகளைக் களைந்து, புதிதாக மழைநீர் வடிகால் அமைத்து, concrete slab *அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகராட்சியில், விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே அதற்கான பதில் தரப்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாமக்கல் நகரின் நடுவில் ஓடுகின்ற ஆறுகளை அகலப்படுத்தி, மழைநீர் வெளியேற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்கிறார். நகரத்திற்குள் இருக்கிற வாய்க்கால்களாக இருந்தாலும், அவை நீர்வளத் துறை சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், நீர்வளத் துறையினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும். ஏனென்றால், மழைநீர் வடிகால் என்பது அவசியம் செய்யப்பட வேண்டிய ஒன்று. எனவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் நகராட்சியில் இரண்டு குடிநீர்த் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டம், சிறு விசை பம்புகள் மற்றும் தெரு விளக்குகளின்*

பயன்பாட்டிற்கான மின்சாரத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.75 இலட்சம் மின் கட்டணமாகச் செலவிடப்படுகிறது. இச்செலவினத்தைக் குறைக்க நகராட்சியின் மூலமாக மரபுசாரா எரிசக்தியான சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்க நாமக்கல் நகராட்சிக்குச் சொந்தமான லத்துவாடி ஊராட்சிப் பகுதியில் அமைந்துள்ள 13 ஏக்கர் நிலத்தில் சோலார் மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற அந்தப் பணி என்பது, அரசு சார்பாக, அரசின் நிதியிலிருந்து செய்யப்படுவது இல்லை. மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்துதான் ஆங்காங்கு அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்போது அவர் கேட்டிருக்கிற கேள்விக்கு, எனக்கு தந்திருக்கிற பதில், தற்போது நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான 17 வார்டுகள் மற்றும் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.313.38 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, கழிவுநீரைப் பொறுத்தளவில், நாமக்கல் நகராட்சியில் அனைத்துப் பணிகளையும் முழுமையாக முடிப்பதற்கும், நீரை மறுசுழற்சி செய்து, தண்ணீரை விடுகிற பணிக்காகவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிதியாதாரம் கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–05

அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நகரின் நடுவில் வருகிற வாய்க்கால்களைத் தூர்வாரி, மழைக் காலங்களில் நீரை சரியாகக் கொண்டு செல்கிற பணியினை நகராட்சி சார்பாக தற்போது செய்துகொண்டிருக்கிறோம். சென்னையிலே 2,200 கிலோ மீட்டர் நீள வாய்க்காலை, அது நீர்வளத் துறை அல்லது மற்ற துறைகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, மாநகராட்சிதான் செய்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் சேலத்திலும், நாமக்கல்லிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. எனவே,

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, துறை அதிகாரிகளுடன் பேசி அவற்றைத் தூர் வாருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

நகராட்சியிலேயே சொந்த நிதியாதாரம் இருந்தால் சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்கும் பணியைச் செய்துகொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சியில் 2018 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டம் இன்னும் முழுமையாக நடைபெறவில்லை. நகராட்சியின் பாதி வீடுகளுக்குக் கழிவுநீர் இணைப்பு கொடுக்கப்படவில்லை. கழிவுநீர் காவிரி ஆற்றில் கலக்கிறது. வீரக்கல்புதூர், P.N. பட்டி பேரூராட்சிகளின் கழிவுநீரும் காவிரி ஆற்றில் கலக்கின்றது. கழிவுநீர் காவிரி ஆற்றில் கலப்பதை எங்களுடைய மாண்புமிகு பொறுப்பு அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் தடுக்க வேண்டும். அதேபோல் பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவே, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து நான் அங்கு சென்றபோதே என்னிடத்தில் சொன்னார்கள். ஒப்பந்தக்காரர்களோடு நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்தால்கூட, கொரோனா தொற்று ஏற்பட்டதால், அந்தப் பணி விடுபட்டுப் போய்விட்டது. அந்தப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்றும், அதேபோல், வீடுகளுக்கு இணைப்புகளை வழங்கும் பணியும் முடிவுறவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். துறை அதிகாரிகளுடன் பேசி, வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குவது உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் முடிக்க

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பெரியகுளம் தொகுதியில் தேவதானப்பட்டியின் மையப் பகுதியில் கழிவு நீரோடை பெரிய அளவில் சென்றுகொண்டிருக்கிறது. அது தூய்மைப்படுத்தி, சீரமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களாக விரிவடைந்த ஒவ்வொரு பகுதியிலும், ஏற்கெனவே இருந்த வாய்க்கால்களில் கழிவுநீரை விடுவது கடந்த 20, 30 ஆண்டுக் காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்னையை எடுத்துக்கொண்டாலும்கூட கூவம் நதி,* Buckingham Canal, *அடையாறு போன்ற பகுதிகளில் 500–க்கும் மேற்பட்ட இடங்களில் கழிவுநீர் கலக்கிறது. முதற்கட்டமாக, சென்னையை பொறுத்தளவில்,* Chennai Metropolitan Water Supply and Sewerage Board *மூலமாக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். கழிவுநீரை ஆற்றில் கலக்காமல், அதனைக் குழாய்மூலம் எடுத்துச் சென்று சுத்திகரித்து, மீண்டும் ஆற்றிலே விடுகிற பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனைச் சென்னையில் முதற்கட்டமாகச் செய்து கொண்டிருக்கிறோம். மற்ற நகரங்களுக்கு வருகிறபோது, ஒவ்வோர் இடத்திலும் உள்ள நிதியாதாரத்தை வைத்து அங்குள்ள நதிகளில் கழிவுநீர் கலப்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், ஒவ்வோர் இடத்திலும் இதற்கான நிதியாதாரம் வேண்டும். எனவே, அதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, ஒரே நேரத்தில் அனைத்துப் பகுதிகளிலும் செய்ய முடியாது என்பதைக் கருத்தில்கொண்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப, ஒவ்வொரு நகரமாக எடுத்துக்கொள்ளப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்*

2023 ஏப்ரல் 19]

அவர்கள் தெரிவித்த கருத்து கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் கடுமையான தொடர் மழைப் பொழிவுள்ள பகுதி எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதி, ஆண்டுதோறும் குறைவில்லாத நீர்வளம் கொண்ட பகுதியாக இருப்பினும், முறையான நீர் மேலாண்மை இல்லாத காரணத்தினால், விரைவிலேயே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக கூடலூரிலிருந்து நடுவட்டம் பகுதியில் உற்பத்தியாகும் சிக்மோயார் ஆற்றிலிருந்து மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தகவலைத் துறை அதிகாரிகளோடு கலந்து பேசுகிறேன். ஏனென்றால், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, 36 இடங்களில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றிற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அவர்களுடைய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட பணிகளில், 18–க்கும் மேற்பட்ட பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூர் பகுதியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதுபற்றிய விவரத்தினை அறிந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தனியாக கடிதம்மூலம், தற்போது என்ன பணி நடைபெறுகிறது, என்ன பணியைச் செய்ய முடியும் என்பது குறித்த விவரங்கள் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, திருச்செங்கோட்டில் FSTP செயல்பாட்டில் இருக்கிறது என்று சொன்னார்கள். FSTP சென்ற ஆட்சியில் ரூ.4.00 கோடி செலவில் அமைக்கப்பட்டது. திருச்செங்கோடு நகராட்சியின் கழிவுநீரினை வேறோர் ஊராட்சியில் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடிய திட்டமாக FSTP வேறு ஊராட்சியில் அமைக்கப்பட்டது. அந்த ஊராட்சி மக்கள் திருச்செங்கோடு நகராட்சியின் கழிவுநீரினை அங்கு அனுமதிப்பதே கிடையாது. ரூ.4.00 கோடி செலவு செய்து FSTP அமைத்தும் செயல்படாமல் இருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்றுதான் திருச்செங்கோட்டிற்கு தீர்வாகும். அதைச் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே, ஏன் நீங்கள் அருகில் இருக்கின்ற ஊராட்சிகளை நகராட்சிகளோடு இணைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு இதுதான் முக்கியமான காரணமாக உள்ளது. ஆனால், ஊராட்சியில் இருக்கின்ற மக்கள், அப்பகுதியில் 100 நாள் வேலை திட்டம் இல்லையென்ற காரணத்தினால் நகராட்சியிலிருக்கிறவர்களோடு இணைவதற்கு ஒத்துக்கொள்வதில்லை. திருச்செங்கோடு அதிக அளவில் வளர்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தால், கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்குரிய இடம் கிடைப்பதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன. அதனால்தான் அருகிலிருக்கிற இடத்திற்குச் செல்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்பதுபோல், அப்பகுதி மிகப் பெரிய நகரமாக வளர்ந்து வருவதன் காரணமாக பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற திருச்செங்கோடு பகுதிக்குப் பாதாள சாக்கடை வசதியை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, புதிய திட்டத்தினை உருவாக்குவதற்கு

நிச்சயமாக கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

182—

சாலையை அகலப்படுத்துதல்

***12823—திரு. A.P. ஜெயசங்கரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர்-பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதில்.*

தஞ்சாவூர்-பெரம்பலூர்–ஆத்தூர், தேசிய நெடுஞ்சாலை எண் 136 ஆகும். இந்தச் சாலை, சேலத்திலிருந்து ஆத்தூர் வழியாக பெரம்பலூர் செல்லும் சாலையாகும். ஆத்தூர் முதல் பெரம்பலூர் வரை 55 கி.மீ. உள்ள இந்தச் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. 27–5–2022 அன்றுதான் மாநில நெடுஞ்சாலை அலகிற்கு அது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது சேலம் மாவட்டத்திலுள்ள 27 கி.மீ. நீளச் சாலையாகும். தற்போது 7 மீட்டர் அகலத்தில் இருவழிச் சாலையாக உள்ள இச்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்க ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*